REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 28உ புதன்: (14—12—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 29உ வியாழன் (15—12—55) [இதழ் 156

2-வது திட்டத்தில் அபிவிருத்திச் செலவு

சுமார் ரூ. 2,000 கோடியென தகவல்

புதுடில்லி, டிச. 13—

'இரண்டாம் திட்டத்தில், அபிவிருத்திச் செலவு சுமார் ரூ. 2,000 கோடி இருக்கலாம்' என திட்ட இலாகா உதவி மந்திரி எஸ் என் மிஸ்ரா, மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்ட தகவலைத் தந்திருக்கிறார்.

தேர்தலில் இடம் பெற காங்கிரசார் புரட்டு!

'மேலிடத்தின் சர்வாதிகாரப் போக்கு'

'கட்சி உறுப்பினருக்கு வாய்ப்பூட்டு'

இரு கர்நாடக மாநிலம் கோரும் காங்கிரஸ் தலைவர் குற்றச்சாட்டு!

பெங்களூர், டிச. 12—

ஓய்ந்து போய்விட்டதாகக் கூறப்பட்ட 'இரண்டு கர்நாடக மாநிலம்' என்ற கொள்கையினைத் தீவிரமாகப் பேசி வருநர் மைசூர் பிரதேசக் காங்கிரசின் முன்னாள் தலைவர் எச். கே. வீரண்ண கௌடா இப்போது காங்கிரஸ் மேலிடத்தின்மீது பாய்ந்திருக்கிறார்.

'கர்நாடக மாநில அமைப்பு குறித்து, மாநில புது அமைப்புக் குழுவின் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கக்கூடாது' என்று காங்கிரஸ் மேலிடம் 'வாய்ப்பூட்டு'ப் போட்டதாக அவர் சீறியிருக்கிறார்.

"மைசூர் பிரதேசக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலும், சட்டசபையிலும் பெருவாரியான வாக்குகள் ஒரே கர்நாடக மாநிலக் கோரிக்கைக்கு எப்படிப் பெறப்பட்டன என்பது எல்லோருக்கும் தெரிந்ததே!

"எங்களுக்குப் பேசவும் வாக்களிக்கவும், உரிமை தரப்பட்டிருந்தால், முடிவு வேறுவிதமாக இருந்திருக்கும்.

"குழுத் திட்டம் விவாத நிலையிலிருக்கும்போதே காங்கிரசார் தங்கள் கருத்தை அறிவிக்க முடியாதவாறு மேலிடம் 'வாய்ப்பூட்டு' போட்டது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை?

"எல்லோருக்கும் சுதந்திரமாக வாக்களிக்கச் சுதந்திரம் தந்து, பின்னர், பெருவாரியான வாக்குகளால் ஒரே கர்நாடக மாநிலம் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் நான் அந்த முடிவுக்குத் தலைவணங்க முடியும்.

"காங்கிரஸ் மேலிடம், காங்கிரசார் கருத்தறிய மேற்கொண்ட வழி, சர்வாதிகார வழியாயிருக்கிறது."

"மைசூர் தனி மாநிலமாக இயங்க வேண்டும் என்று கோரும் இயக்கத்தை கிளர்ச்சி இயக்கம் என்று கூறுவது தவறு," என்றும் வீரண்ண கௌடா குறிப்பிட்டிருக்கிறார்.

என்றெல்லாம், தோழர் வீரண்ண கௌடா குறிப்பிட்டிருக்கிறார்.

ஆக்கவேலை செய்திருப்பதாக 'பொய் அறிக்கை' தருகின்றனராம்!

'இவர்களே கட்சிக்குக் கேடு விளைவிப்பவர்கள்'

என பொதுச்செயலாளர் வருத்தம்

ஜலந்தர், டிச. 12—

தாங்கள் ஆற்றும் ஆக்கவேலை குறித்து சில காங்கிரஸ் தீவிர ஊழியர்கள், 'போலி' அறிக்கைகளை அனுப்புவதாக பஞ்சாப் மாநில காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளரான தர்பாரா சிங் என்பார் மிக வருந்துகிறாராம்!

பல ஊழியர்கள் அனுப்பிய 'போலி' அறிக்கைகள் குறித்து விளக்கம் தந்த அவர், இந்தத் தீவிர ஊழியர்கள் எல்லாம் தாங்கள் அனுப்பும் 'போலி அறிக்கை'களைப் பின்னணியாகக் கொண்டு, காங்கிரஸ் இயக்கத்தை ஏமாற்றி, வரப்போகும் பொதுத் தேர்தலில் கட்சி 'டிக்கெட்' பெற்று போட்டியிடலாம் என்று நினைத்துக் கொண்டிருப்பதாயும், வேதனையோடு குறிப்பிட்டாராம்!

"பொய்யான அறிக்கைகள் தருவதின் மூலம் இந்த நபர்கள் காங்கிரஸ் கட்சிக்குப் பெருங்கேடு விளைவித்து வருகின்றனர்; அத்தகு காங்கிரசார்தான் காங்கிரஸ் கட்சிக்குள்ள மிகப் பெரும் பலவீனத்தின் ஊற்றுக்கால்களாவர்" என்றும், அவர் குறிப்பிட்டிருக்கிறாராம்!

குமரிமுனை — பம்பாய் இணைப்புப் பாதை

ரூ. 7 கோடி செலவிடப்படும்

புதுடில்லி, செப். 14—

பம்பாயைக் கன்னியாகுமரி முனையுடன் இணைக்கும் மேற்குக் கடற்கரை பாதைக்கு ரூ. 7 கோடி செலவாகுமென மதிப்பிடப்படுகிறதாம். மத்திய ஆட்சியினரே இதற்கான முழுச் செலவை ஏற்றுக்கொள்ளக் கூடுமாம்.

ஆலைத் தொழிலாளரிடை மோதுதல்

இருவர் பலியாயினர்; பலர் கைது

தலைமைப் பதவித் தகராறின் விளைவாம்!

கல்கத்தா, டிச. 13—

இங்கிருந்து 14 மைல் தொலைவில் உள்ள தித்தாகர் எனும் இடத்திலிருக்கும் சணல் ஆலை ஒன்றில் வேலை செய்யும் தென்னாட்டுத் தொழிலாளர்களில் இரு சாரார், தங்களுக்குள் மோதிக் கொண்டதின் விளைவாக இரண்டு பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; ஆறு பேர்வரை படுகாயமுற்றிருக்கின்றனர்; 30 பேர்வரை போலீசாரால் கைதாகியிருக்கின்றனர்.

ஆலையில் வேலை செய்யும் தென்னாட்டுத் தொழிலாளர்களுக்கு யார் தலைவராக இருப்பது என்பதை ஒட்டி, இரு போட்டிக் கோஷ்டிகளிடையே எழுந்த தகராறின் விளைவுதான் இது என்று கூறப்படுகிறது.

இரு சாராரும் கத்தி, கொடுவாள், குண்டுகள், தடிகள் முதலியனவற்றைத் தாராளமாக உபயோகித்துக்கொண்டனராம்.

இறந்தவர்களில் ஒருவர் கத்திக் குத்துக்கும், மற்றவர் குண்டுக்கும் பலியாயினராம்.

போலீசார் 4 குண்டுகள், தடிகள், கத்திகள் முதலியனவற்றையும் கைப்பற்றியிருக்கின்றனராம்.

மனைவியின் தலையை சிவனுக்குக் காணிக்கையாக்கியவர்

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்

ராஜ்கோட், டிச. 13—

தனது 15 வயது மனைவியின் தலையைக் கோடரி கொண்டு கொய்து, சிவபெருமான் சன்னதியில் நந்தி (ரிஷபம்) முன் படைத்த சகன்பூரா என்ற 16 வயது இளைஞர் ஒருவருக்கு நேற்று ஜாம்நகர் 'செஷன்ஸ்' நீதிபதி ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

கடந்த செப்டம்பர் திங்கள் 18-ந் தேதியன்று, சகன்பூரா, தனது இல்லத்தில் மனைவி தூங்கிக்கொண்டிருந்தபோது கோடரியால் அவள் தலையை வெட்டி, கையில் எடுத்துக்கொண்டு தனது ஊருக்கு ஒதுக்குப்புறத்திலிருந்த சிவன் கோவிலுக்குச் சென்று, நந்திமுன் தலையைக் காணிக்கையாக்கிவிட்டுச் சென்றுவிட்டாராம்.

பெல்லாரி கிளர்ச்சி நிறுத்தப்படுகிறது

புதுடில்லி, டிச 12—

'பெல்லாரி கர்நாடகத்துடனேயே இருக்கவேண்டும்' என்று, கோரி நடைபெற்றுவரும் கிளர்ச்சியை நிறுத்திவைத்திருப்பதாக அகண்ட கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத்தின் 'சர்வாதிகாரி'யான சிவமூர்த்திசுவாமி எம். பி. அறிவித்திருக்கிறார்.

டெல்லி, மைசூர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்புதான் கிளர்ச்சியை நிறுத்தியிருப்பதாயும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

நடிப்புப் புலவர் இசைப் புலவராகிவிட்டார்!

பொதுச்செயலாளர் தலைமையில் இசையரங்கு

(நமது தனி நிருபர்)

தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டு நிதிக்காக சென்னை மாவட்டக் கழகத்தவர், கடந்த 10—12—55 அன்று கோகலே மண்டபத்தில் நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமியின் இசை அரங்கு ஒன்று ஏற்பாடு செய்திருந்தனர்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்கள்.

அன்பளிப்பு செலுத்தி ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் ஏராளமான பெண்களுட்பட விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் தபால்-தந்தி இலாகா (ஆர். எம். எஸ்.) சென்னை கிளை ஊழியர்கள் சார்பாக ரூ. 100 சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதியிடம், மாநில மாநாட்டு நிதிக்கென ஒப்புவிக்கப்பட்டது.

நடிப்புப் புலவர் கே. ஆர் இராமசாமி அவர்கள் இசை அரங்கு முடிந்தபின், தலைமை உரை நிகழ்த்திய பொதுச்செயலாளர் அவர்கள்,

"இதுகாறும்வரை நாம் இராமசாமி அவர்களை 'நடிப்புப் புலவர்' என்றே அழைத்துவந்தோம்; இனி, அவரை 'நடிப்பு, இசைப் புலவர்' என்று அழைக்க வேண்டும். நாம் எதிர்பார்த்ததற்கு மேலாகவே இராமசாமி அவர்கள் இனியதொரு இசை விருந்தளித்தார். இராமசாமி அவர்களுக்கு இது புதியதொரு முயற்சி; முதன் முறையிலேயே, அவர் இன்று தனது முயற்சியில் பெரும் வெற்றி பெற்றுவிட்டிருக்கிறார்," என்று குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"இசைத் துறை, நாம் இன்னும் கைப்பற்றாத துறையாகவே இருக்கிறது. நம்மிடத்தில் சிறந்த எழுத்தாளர்கள் உண்டு; சிறந்த சொற்பொழிவாளர்கள் இருக்கின்றனர்; நல்ல நடிப்புக் கலைஞர்கள் இருக்கின்றனர்; ஆனால், இசைத் துறை

(4-ம் பக்கம் பார்க்க)

இரண்டாம் திட்டத்திற்குத் தேவையான நிதி!

இந்திய நிதி அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, டிச. 12—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி வசதிகளை உள்நாட்டு நிதி ஆதாரங்களை நம்பிச் செய்வதே மேலானது," என்று, நிதி மந்திரி தேஷ்முக், மக்கள் சபை காங்கிரஸ் கட்சியின் நிதி நிர்த்தாரக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டதாகத் தெரியவருகிறது.

"இரண்டாம் திட்டத்தில் சர்க்கார் துறையின் மொத்த முதலீட்டு அளவு ரூ. 3,800 கோடியாகவே இருக்கும்பட்சத்தில் உபரியாக வரி விதிப்புக்கோ, அயல்நாட்டு உதவிகளுக்கோ தேவை இருக்காது," என்றும் அவர் கூறினாராம்.

"இதற்கு மாறாக, முதலீட்டு அளவில் ரூ 500 கோடி கூடுதலாகுமானால், வரி விதிப்பு விசாரணைக் குழுவின் சிபாரிசுகளை ஒட்டி ரூ. 850 கோடிக்கு அதிகமான வரியை திட்டகாலத்தில் எழுப்பவேண்டிவரும்; அடுத்த திட்டத்தின்போது இரயில்வேக்களிலிருந்து ரூ.800 கோடிவரை லாபம் வரும்; சிறு சேமிப்புகள், கடன் தொகைகள் மூலம் ரூ. 1000 கோடி வரலாம்," என்றும் நிதி மந்திரி கூறினாராம்.

'திட்ட முதலீட்டு அளவு ரூ. 4,800 கோடியாக இருந்தால் ரூ. 480 கோடி அயல்நாட்டு உதவி தேவைப்படும்' என்றும், 'அளவு ரூ 4,800 கோடியானால் ரூ. 800 கோடி வெளிநாட்டு உதவி தேவை' என்றும் தேஷ்முக் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

மேலும், ரூ 1000 கோடி முதல் ரூ. 1200 கோடி வரை பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டம் தயாரிக்க வேண்டியிருக்கும் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தாராம்.

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 14—12—'55 புதன்

தெளியவைக்கிறார்!

★

இந்தி மொழிக்கும், மாகாண மொழிகளுக்கும் வருங்காலத்தில் இருக்கவேண்டிய தொடர்பு எத்தகையதாக அமையவேண்டும் அல்லது அமைக்கப்படவேண்டும் என்பது குறித்து, பொருள் நிரம்பிய கருத்தை, ஆரியக் கலாச்சாரப் பாதுகாவலரான உத்திரப் பிரதேச கவர்னராகப் பணிபுரிந்துவரும் கே. எம். முன்ஷி வெளியிட்டிருக்கிறார். இந்தியத் துணைக் கண்டத்தின் 'தேசிய மொழிகள்' என அரசியல் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள ஒரு விதியை பெரிய பலமிக்கச் சாதனமாகக் கொண்டு, அம்மொழிகளை அரியாசனத்தமர்த்த, அம்மொழிவழி வந்தவர்கள் அரும்பாடுபட்டு வருகின்றனர். அவர்கள் கண்களைத் திறக்கும் நிலையிலேயே முன்ஷியின் உரை அமைந்திருக்கிறது.

அதை, அலட்சியமாகத் தள்ளிவிடுவதற்கில்லை. கொஞ்சம் விரிவாகவே நுணுகி ஆராயவேண்டும். அத்தகு ஆராய்ச்சிக்கு முன்னதாக, தேசிய மொழிகள் பற்றி அரசியல் சட்டம் குறிப்பிடுவது என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கப்பெறும் நூற்றுக்கணக்கான மொழிகளில், பதினான்கு மொழிகளை மட்டுமே பொறுக்கி எடுத்து, அவைகளுக்குத் 'தேசிய மொழிகள்' எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது, அரசியல் சட்டத்தில். மற்ற மொழிகள் அனைத்தையும் அலட்சியப்படுத்தி ஒதுக்கித் தள்ளிவிட்டனர், அரசியல் சட்டம் தீட்டிய நல்லவர்கள்.

'தேசிய மொழி' எனத் தங்கள் மொழியும் அரசியல் சட்டத்தில் இடம் பெறாதது கண்டு, அம்மொழி வழிவந்தவர் —அவர்கள் சிறு தொகையினராயினும், பெரும் எண்ணிக்கையினராயினும் — வேதனைப்பட்டுத்தான் இருப்பர். அரசியல் சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்ற மொழிகளிடத்து ஒருவகை வெறுப்பும், தங்கள் மொழிகளுக்கு இல்லாததன்மையில் அம்மொழிகளுக்கு ஏதோ ஒரு புதிய ஏற்றமும் ஏற்பட்டுவிட்டிருப்பதாக ஒரு தவறான கருத்தும் அவர்களுக்கு ஏற்பட்டும் இருக்கக்கூடும். வேதனையும், வெறுப்பும், தவறான நம்பிக்கையும் அவர்களுக்கு இருப்பது இயல்பேயாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கப்பட்டு வரும் நூற்றுக்கணக்கான மொழிகளுள் குறிப்பாகப் பதினான்கு மொழிகளை மட்டுமே தேசிய மொழிகளாக அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டு இருப்பது கண்டு, அப்பதினான்கு மொழிகளையும் தனித்தனியாகத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் மக்கள், தங்களுடைய ஒவ்வொரு தாய் மொழிக்கும் எதிர்காலத்தில் புதிய வாழ்வு கிடைக்கப் போகிறது எனப் பூரிப்படையவும் அடைவர். இது வெறும் கற்பனையல்ல. அப்பதினான்கு மொழியினரும், தம் தம் மொழிகளை வளமாக்கிக்கொள்வதற்குரிய துறைகள் அனைத்தையும் தீவிரமாகச் செயலாற்றியும் வருகின்றனர்.

ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள 'தேசிய' மொழிகளை வளமாக்குவதற்கு, தனிப்பட்டவர்களுடையவும், கல்விக் கழகங்களுடையவும் முயற்சி ஒரு பக்கம் இருக்க, ஒவ்வொரு மாகாண அரசாங்கமும், தத்தமக்கே உரிய 'தேசிய' மொழிகளில் செயல்படவும் முயலுகின்றன. இடைநிலைக் கல்வி முதல், கல்லூரிக் கல்வி வரையில் போதனு மொழியாக ஒப்புக்கொள்ளப்பட்ட 'தேசிய' மொழியையே புகுத்துவதிலும் ஆர்வம் காட்டப்படுகிறது. தொழில் கல்லூரிகளிலும் இதே புதுமுறை பின்பற்றப்பட வேண்டுமென வலியுறுத்திக் கூறப்பட்டுவருகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ளப் பதினான்கு மொழியினருக்கு மட்டுமே, தம் தம் மொழிக்கு ஆக்கம் தேடுவதில் இத்தகு புத்தார்வம் பிறந்திருக்கிறது எனக் கூறிவிடுவதற்கில்லை. அரசியல் சட்டத்தால் புறக்கணித்து விடப்பட்ட மற்ற மொழியினருக்குக் கூட, தம் தம் மொழிகளுக்கு ஆக்கம் தேடுவதில் புதிய கருத்துத் தோன்றியிருக்கிறது. இருந்தாலும், தங்கள் மொழியும் 'ஒரு தேசிய மொழி'தான் என அரசியல் சட்டம் ஒப்புக்கொள்ளாதது, அவர்களுடைய நினைப்புக்கு ஒரு தடைக்கல்லாக இருந்து வருகிறது.

பதினான்கு மொழிகளை மட்டுமே 'தேசிய மொழிகள்' என அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்டுள்ள காரணத்தால், ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இப்பதினான்கு மொழிவழி வந்துள்ளவர்கள், தம் தம் மொழியினை வளப்படுத்திக் கொள்வதற்கு உரிமை பாராட்டுகிறார்கள். அதற்கு அரசியல் சட்டம் ஒப்புதல் ஒரு பெருந்துணையாக இருந்துவருகிறது. அந்தச் சட்ட ஒப்புதலை ஒரு பெரிய பலம் பொருந்திய கருவூலமாக நம்பிக்கொண்டு இருப்பதுதான், பதினான்கு மொழியினருக்கும், தம் தம் மொழிகளுக்கு ஏற்றம் தேடும் புதிய எண்ணத்தைக் கொடுத்திருக்கிறது.

எடுத்துக்காட்டாக, நம் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு ஏற்பட இருக்கும் சிறந்த எதிர்காலம் குறித்து, கல்வி அமைச்சர் பலபடக் கூறிவருகிறார். 'தமிழ், இனி நுழையாத இடமே நாட்டில் இருக்காது' என்கிறார் அமைச்சர்!

அவர் பேச்சில் நமக்குப் புதியதோர் இன்பம் ஏற்படுகிறது. அவர் முயற்சியில் நமது இதயம் மகிழ்ந்துத் திளைக்கிறது. கல்வி அமைச்சர் ஓரோர் தருணம், தம் இயல்புப்படியோ, அல்லது, சேர்க்கைப் போக்குப்படியோ நமது சீற்றத்தைக் கிண்டிக் கிளறும்பொழுதுகூட, அவருக்குள்ள தமிழ்ப்பற்றுக் காரணமாக, அவர் நம்மிடம் எதிர்பார்ப்பதைத் திருப்பிச் சுடச்சுட அளிக்க முடியாமல், பராமுகமாக இருந்துவிடுகிறோம்; அவர் இழிபோக்கை, மன்னித்தும் — மறந்தும்விடுகிறோம்.

நமது தாய் மொழியாம் தமிழுக்கு, நமது கல்வி அமைச்சர் தேடித்தர இருக்கிற புதிய நிலைக்கு, அரசியல் சட்டத்தில் அறிந்தோ அறியாமலோ புகுத்தப்பட்டிருக்கிற 'தேசிய மொழி' ஏற்பாட்டைத்தான், அவர் நம்பி செயல்பட்டு வருகிறார். அந்த ஒரு ஏற்பாட்டில் கல்வி அமைச்சருக்கு உள்ள நம்பிக்கை அசைக்க முடியாததாகும் என்பதை, அமைச்சரின் சொல்லும் செயலும் உறுதி செய்கின்றன.

மொழி பற்றிய அரசியல் சட்ட விதியை ஒரு பெரிய பலமாக மதித்து, தமிழுக்கு அதற்குரிய இடந்தேட அமைச்சர் கிளம்பி இருக்கிறார். தமிழை வளர்க்க எந்தச் சட்ட விதியை அமைச்சர் ஒரு பெரிய கருவூலமாக நம்பிஇருக்கிறாரோ அந்தச் சட்ட விதி எதிர்காலத்தில்—அதுவும் கூடிய விரைவில், இந்தி வெறியர்களால் சட்டத்திலிருந்து அறவே அகற்றிவிடப்பட்டாலும் பட்டுவிடக்கூடும் என்றே நாம் ஐயுறுகிறோம். புதிய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து ஐந்தாண்டுகளுக்குள்ளாக, ஏழு முறை அரசியல் சட்டத்தைத் திருத்தியாகி விட்டது; இப்பொழுது எட்டாவது முறையாகவும் திருத்தம் செய்யும் முயற்சி முடிவுறும் தருவாயில் இருந்து வருகிறது.

இந்தப் போக்கு ஒன்றே நமது அவநம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்குப் போதிய காரணமாகும்.

வடநாட்டுப் பகுதிகளில் வளம் தரும் வாய்க்கால்கள்

கருங்கல் பாறைகள் மறைந்து அணைக்கட்டுகள் அமைகின்றன

நான்கு இலட்சம் ஏக்கர் விளைச்சல் திட்டம்-30,000 பேர் பணியாற்றிய விவரம்

உத்தரப் பிரதேசத்திலுள்ள ஜான்சி, ஜாலன், ஹமீர்ப்பூர், பந்தா மாவட்டங்களும், மத்தியப் பிரதேசத்திலுள்ள சாஹூகர் மாவட்டத்தின் வடபாகமும சரித்திர ரீதியாக 'பண்டேல்கண்ட்' என அழைக்கப்படுகின்றன. இப்பகுதிகளில் குறுக்கும் நெடுக்குமாகப் பல ஆறுகள் ஓடுகின்றன.

முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் உத்தரப் பிரதேசத்துக்கு நீர்ப்பாசன வசதிக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட தொகையில் 33 சதவிகிதம் இப்பிரதேச நீர்ப்பாசனக் காரியங்களுக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதனால், இம்மாவட்டங்களிலுள்ள சுமார் மூன்று இலட்சம் ஏக்கர் நிலத்துக்குத் தண்ணீர் கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்துக்கு 'மாதா திலா திட்டம்' என்று பெயர் வைக்கப்பட்டதற்குக் காரணம், இப்பெயர் கொண்ட அம்மனின் கோவில் சமீபத்திலுள்ள பாலத்திற்குப் பக்கத்திலிருப்பதுதான்.

இத்திட்டத்தின்படி ஜான்சிக்குத் தெற்கே 30 மைல் தூரத்தில் பெட்வா நதிக்குக் குறுக்கே 2,340 அடி நீளமும், 120 அடி உயரமுமுள்ள ஒரு கட்டுமான அணை கட்டப்படும்; அதன் பக்கவாட்டுகளில் மண் கரைகள் போடப்படும். இந்த அணையிலிருந்து உத்தரப் பிரதேசம், மத்திய பாரத், விந்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள சுமார் நான்கு இலட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசனமளிப்பதற்காக இரு கால்வாய்கள் வெட்டப்படும்.

இரண்டு கட்டங்கள்

இத்திட்டம் இரு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது கட்டத்தில் 'ஸ்பில்வே' உச்சம் வரை அணை கட்டப்பட்டு தேக்கத்தில் 1,60,000 கன அடி தண்ணீர் தேக்கி, இம்மூன்று மாநிலங்களிலுமுள்ள சுமார் 2,64,000 ஏகர் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இக்கட்டத்திலேயே மின்சார உற்பத்தி நிலயம் ஒன்று ஏற்படுத்துவதற்காகப் 'பென்ஸ்டாக்கு'களும் அமைக்கப்படும்; இதுவரையில் இத்திட்டத்துக்காக ரூ. 4.8 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அடுத்தக் கட்டத்தில் 'ஸ்பில்வே' உச்சியில் எஃகுக் கதவுகள் போடப்படும்; நீர்த்தேக்கத்தில் சுமார் 50 சதுர மைல் பரப்பளவில் 4,00,000 இலட்சம் கன அடி தண்ணீர் தங்கி நிற்கவும் வழி செய்யப்படும். அதிகப்படியாகத் தங்கும் தண்ணீர் மூலம் இலட்சிய அளவான நான்கு இலட்சம் ஏக்கருக்குச் சுமார் 770 மைல் நீளத்துக்குப் பரவியிருக்கும் கால்வாய்த் தொடரின் மூலம் நீர்ப்பாசனம் அளிக்கப்படும்.

மண் அணை

மத்தியில் உள்ள கட்டுமான அணைக்குப் பக்கவாட்டுகளில் சுமார் $4\frac{1}{2}$ மைல்களுக்கு மண் கரைகள் போடப்படும்; இவற்றின் உயரம் 20 அடியிலிருந்து 80 அடி வரை இருக்கும். இத்திட்ட வேலை வெகு தீவிரமாக நடைபெற்ற சமயத்தில் இதில் சுமார் 30,000 வேலையாட்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

ஆட்களின் உழைப்புத் தவிர, மண்வாரும் பெரியஇயந்திரங்களும் அதிக அளவில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன; அணை இடத்தில் இயந்திரக் கருவிகளைச் சீராக வைத்திருப்பதற்காக ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

கால்வாய்கள்

மாதாதிலா நீர்த்தேக்கத்திலிருந்து குருசாரை, பந்தர் என்ற இரு முக்கியக் கால்வாய்கள் புறப்படுகின்றன. பண்டேல்கண்டு பகுதியில் கால்வாய்கள் வெட்டுவது மிகவும் கடினமான வேலையாக, இருந்தது; ஒரு வழி உண்டாக்குவதற்காக 400 கெஜ தூரத்துக்குக் கருங்கல்லை வெடி வைத்து உடைத்து அகற்ற வேண்டியிருந்தது. குருசாரைக் கால்வாயை முதல் 20 மைல் வெட்டுவதற்காக 20 இலட்சம் கன அடி கல்—அதாவது 40 இலட்சம் மணங்கு எடையுள்ள கல்லை வெடித்து அப்புறப்படுத்தவேண்டியிருந்தது.

வேலை முன்னேற்றம்

1955-ம் ஆண்டு எப்ரல் திங்கள் முடிவுகளுள் முதலாவது ஐந்தாண்டுத் திட்ட இலட்சிய அளவு வேலை நடந்துவிட்டது. கட்டுமான அணை 30 அடிக்கு உயர்ந்துவிட்டது. குருசாரைக் கால்வாய் 17 மைல் நீளத்துக்கும், அதன் கிளைக் கால்வாய்கள் 55 மைல் நீளத்துக்கும் வெட்டியாகிவிட்டது. பந்தர் கால்வாய் வேலையும் நன்கு நடைபெற்றுவருகிறது; நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்குள் இதன் வேலை பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெட்வா கால்வாயை மாற்றியமைக்கும் வேலையில் பெரும் பகுதியும் பூர்த்தியாகிவிட்டது. இக்கால்வாயின் அமீர்ப்பூர் கிளை வேலை 65 மைல் வரை நடந்திருக்கிறது; புதிய கால்வாய்கள் 200 மைல் நீளம் வரை வெட்டப்பட்டிருக்கின்றன.

இத்திட்டத்திலிருந்து, 1956-ம் ஆண்டுக் காலப் பயிருக்கு நீர்ப்பாசனம் அளிக்க முடியும்; இதன் பலன்கள் இதற்கு முன்னர்கூட கிடைக்கலாம்

பலன்கள்

மாதாதிலா திட்டத்தின் மூலம் உத்தரப் பிரதேசத்திலுள்ள ஜான்சி, ஜாலன் மாவட்டங்களில் 2.58 இலட்சம் ஏக்கர் நிலத்துக்கும், மத்திய பாரத்தில் 92,000 ஏக்கருக்கும், விந்தியப் பிரதேசத்தில் 62,000 ஏக்கர் நிலத்துக்கும் நீர்ப்பாசனம் கிடைக்கும்; இதனால் அதிகப்படியாக 75,000 டன் உணவுத் தானியங்கள் விளையும். திட்டத்துக்கு ரூ. 8 கோடி செலவாகும்.

இரண்டாவது கட்டத்தில் நிர்மாணிக்கப்படவிருக்கும் மின்சார உற்பத்தி நிலயம் பூர்த்தியாகும் போது பல நகரங்களுக்கு மின்சார விநியோகம் கிடைக்கும்.

பருத்தி சாகுபடி

இப்பிரதேசத்துக்கு ஏற்றதான பருத்திச் சாகுபடியை அதிகரிப்பதற்கு சர்க்கார் விசேட வசதிகள் செய்து கொடுக்கிறார்கள். நீண்ட இழைப் பருத்தி சாகுபடிக்கான திட்டம் பண்டேல்கண்டில் ஏற்கனவே நன்கு முன்னேற்றமடைந்துள்ளது; இதன்படி 40,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. பருத்தி போடுபவர்களுக்கு நீர்ப்பாசன இலாகா இலவசமாகப் பாசனமளிக்கிறது.

சீனாவில் அன்னிய ஆதிக்கத் திட்டுகள்

சௌ-என்-லாய் கவனமூட்டுகிறார்

'சீனப் பகுதியான பார்மோசா இன்னமும் அன்னிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பில் இருக்கிறது.

"இன்று வரையில்கூட ஏகாதிபத்திய நாடுகள் சீனாவின் பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன என்பதை சீன மக்கள் ஒருபோதும் மறந்துவிட முடியாது,"

என்று, சீனப் பிரதமர் சௌ-என்-லாய் குறிப்பிட்டிருக்கிறார்.

தற்போது சீனா வந்துள்ள கிழக்கு ஜெர்மன் சர்க்கார் கோஷ்டியைகவுரவிக்கநடைபெற்ற தொரு பெரும் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் ஹாங்காங் தீவும், அதற்கு எதிரில் சீனப் பிரதான பூமியில் உள்ள பகுதியும், போர்ச்சுகீசிய மகாவ் பகுதியும் சீனாவில் உள்ள அன்னிய ஆதிக்கத்திற்குட்பட்ட இதர பகுதிகளாகும்.

சிரியா மீது இஸ்ரேல் தாக்குதல்...

பழிவாங்கும் நோக்கமாம்!

ஜெருசலேம், டிச. 12—

கலீலி கடற்கரை மீதுள்ள சிரியாவின் படை நிலைகளை இஸ்ரேலியர் தாக்கியதின் விளைவாக, 55 சிரியாக்காரர்களுக்கு மேல் கொல்லப்பட்டதாகவும், 30 பேர் சிறைப் பிடிக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினாராம்.

4 இஸ்ரேலியர் கொல்லப்பட்டு 12 பேர் காயமுற்றனராம்.

இஸ்ரேலியர், சிரியர்களின் படை நிலைகளைத் தாக்கி, ஆயுதங்களைக் கைப்பற்றித் தங்கள் நிலையங்களுக்குத் திரும்பிவந்ததாக இஸ்ரேலி அதிகாரி கூறினார்.

இஸ்ரேலி பகுதியில், சிரியா சுட்டதற்குப் பழிவாங்கவே சிரியா மீது இஸ்ரேல் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

காங்கிரஸ் மாணவர் மாநாட்டில் குழப்பம்

'வெட்கம், வெட்கம்' என்றுக் கூறி மாணவர்கள் வெளியேறினர்

குண்டூர், டிச. 12—

ஆந்திரப் பிரதேச மாணவர் காங்கிரஸ் மாநாடு இங்கு நடைபெற்ற போது, பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

மாநாட்டுப் பொறுப்பாளர் இராதாகிருஷ்ணன் என்பவர் விஜயவாடாவில் அண்மையில் நடைபெற்ற மாணவர் மாநாடு ஒன்றில் கலந்துகொண்ட மாணவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்ட போது, அதை சில மாணவர்கள் எதிர்த்தனர். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தை ஒட்டி, பல மாணவர்கள், 'வெட்கம்! வெட்கம்!' என்று கூறி, மாநாட்டை விட்டு வெளியேறி யிருக்கின்றனர்.

தோழர் இராதாகிருஷ்ணன் கூறியதை எதிர்த்த மாணவர்களுடன், மாணவர் காங்கிரசைச் சேர்ந்த எல். என். ரெட்டி என்பார் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

மேடையில் அமர்ந்திருந்த அமைச்சர் என். சஞ்சீவி ரெட்டி கீழிறங்கி வந்து இரண்டு போட்டி குழுக்களிடத்திலும் சமரசம் செய்துவைக்க முயன்றது வீணாகி விட்டது.

பின்னர், போலீசார் வரவழைக்கப்பட்டனர்.

மாநாட்டு நடவடிக்கைகளில் கருத்து வேறுபாடு கொண்டோர் மண்டபத்தைவிட்டு வெளியேறி வேறெங்காவது கூட்டம் நடத்திக் கொள்ளலாம் என்றும், மண்டபத்திற்குள்ளிருந்து கலாட்டா செய்ய வேண்டாம் என்றும் அமைச்சர் சஞ்சீவி ரெட்டி கூறினர்.

தொடர்ந்து மாணவர்கள் குழப்பம் செய்ய முற்பட்டால் போலீசார் உதவியுடன் அவர்கள் வெளியேற்றப்படுவர் என்றும் அவர் எச்சரித்தாராம்.

"ஒரு சர்க்கார் இயங்கிக்கொண்டிருக்கிறது; என்னதான் செய்தாலும் மாநாடு நடைபெற்றே தீரும்; தேவையானல் போலீஸ் பாதுகாப்புடன் நடைபெறும்; எனவே, கருத்து வேறுபாடு கொண்டோர், இங்கிருந்து வெளியேறிவிடலாம்," என்றும் அவர் திரும்பத் திரும்பக் கூறினாராம்.

உடனே ஒரு மாணவர் எழுந்து, தான் மாநாட்டுப் பிரதிநிதி என்று கூறியும், சஞ்சீவி ரெட்டி அவரை வெளியேறுமாறு கூறினாராம்.

உடனே பல மாணவர்கள் தங்கள் பிரதிநிதி அடையாளச் சீட்டுகளை மேடையில் விசிறி எறிந்துவிட்டு 'வெட்கம், வெட்கம்' என்று ஒலி முழக்கம் செய்து வெளியேறியிருக்கின்றனர்.

பின்னர் மாநாடு அமைதியாக நடைபெற்றதாம்.

பயன் தரும் பணிகளில் கைதிகள் ஈடுபடுத்தப்படுவர்

சர்க்கார் மேற்கொள்ளும் திட்டம்

சென்னை, டிச. 11—

சிறைக் கைதிகளைச் சோம்பல் தனமான நிலையில் வைத்திருக்கக் கூடாதென்றும், அவர்களைப் பயன் தரும் பணிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் சர்க்கார் கருதுகின்றனர்; ஆகவே, குறுகிய காலத் தண்டனை பெறும் கைதிகளைச் சிறைக் கூடத்திற்கு வெளியே ஈடுபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன.

சென்னை நகரசபை, இப்போது 100 கைதிகளை சில பணிகளில் ஈடுபடுத்தியுள்ளது. உள்ளாட்சிக் கழகங்கள் கோருமானல், அவைகளுக்குத் தேவைப்படும் அளவுக்குக் கைதிகளைப் பணியாற்ற அனுப்புமாறு சிறை அதிகாரிகளுக்குச் சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறது.

ஒரு வாரம் முதல் மூன்று மாதங்கள் வரை குறுகிய காலத் தண்டனை பெறும் கைதிகள்தான் வெளி அலுவல்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

நீண்ட காலத் தண்டனை பெறும் கைதிகள் சிறைக்குள்ளேயே பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பீடித் தொழில் நிலைமை

விசாரணை செய்ய உத்தரவு

சென்னை, டிச. 12—

சென்னை மாநிலத்தில், பீடித் தொழில் நிலைமையை விசாரணை செய்யுமாறு சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். திருச்சி வட்டத் தொழிற்சாலை இன்ஸ்பெக்டர் எம். ஏ. நடராசன் விசேட அதிகாரியாக இதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பீடித் தொழிலில் உள்ள பிரச்சினைகளை எல்லா இனங்களிலும் ஆராய்ந்து, பீடித் தொழிலாளர் பாதுகாப்புக்குச் சட்ட முறையில் தேவைப்படும் சிபாரிசுகளை அரசாங்கத்திற்கு அவர் சமர்ப்பிப்பார்.

அச்சத்திற்குப் பின்னல் வீராப்புப் பேசுகிறார்!

தாக்கமாட்டார்கள் என்றும் 'தன்னம்பிக்கை' கொள்கிறார்

நியூயார்க்—

போர்ச்சுகல் அயல் நாட்டு மந்திரி டாக்டர் குன்ஹா மீண்டும் கொக்கரித்துள்ளார்.

தங்களிடமே கோவாவை வைத்திருப்பதற்கு அவசியமானல் போரில் ஈடுபடவும் போர்ச்சுகல் தயாராக இருப்பதாக ஆவேசமாகக் கூறியுள்ளார்.

'போர் மூண்டால் கோவாவில் உள்ள போர்ச்சுகீசியப் படைகள் தகர்க்கப்படும் என்பது நிச்சயம்,' என்று அச்சமுடன் கூறிய அவர், 'நீண்ட கடும் போராட்டத்திற்குப் பின்னரே, போர்ச்சுகீசியப் படைகள் தகர்க்கப்படும்' என்று வீராப்புக்கொள்கிறார்.

அதே நேரத்தில், அவர் கொள்ளும் 'தன்னம்பிக்கை'தான் வேடிக்கையாக உள்ளது—'இந்திய சர்க்கார் தாங்கள் கையாண்டு வரும் நடுநிலைமையையும், சர்வதேச சட்டத்தில் தனக்குள்ள மதிப்பையும் அடிக்கடி வற்புறுத்தி வந்துள்ளனர்; எனவே, அவர்கள் எங்களை தாக்கமாட்டார்களென்றே நம்புகிறேன்," என்று வேறு கூறியுள்ளார்.

50 இலட்சம் டாலர் பெறுமான இருல் மீன்

மலையாளக் கடற்கரையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி?

இந்தியாவின் தென் மேற்கு பாகத்திலுள்ள மலையாளக் கடற்கரையிலிருந்து கிடைக்கும் 'இருல்' என்ற ஒருவகைமீன், இப்பொழுது அமெரிக்காவுக்கு பெரும் அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இவைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்தியாவுக்கு நிறைய டாலர் கிடைக்குமென்றும் கூறப்படுகிறது

அமெரிக்கா ஆண்டொன்றுக்கு, 25 கோடி முதல் 30 கோடி ராத்தல் அளவு இருல் மீன்களை உபயோகிக்கிறது. இதன் விலை சுமார் 14 கோடி டாலர் ஆகும்.

ஆண்டொன்றுக்கு இந்தியாவிலிருந்து சுமார் 50 லட்சம் டாலர் மதிப்புக்கு இருல் மீன் ஏற்றுமதியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பெட்ரோல் எடுக்க தொழில் நுட்ப உதவி

ருமேனியாவும் இந்தியாவுக்கு உதவுவதற்கு முன்வருகிறது

புதுடில்லி, டிச. 12—

பெட்ரோல் தோண்டி எடுப்பதற்கு இந்தியாவிற்கு தொழில் நுட்ப உதவி வழங்க ருமேனியாவும் முன்வந்திருப்பதாக மாநிலங்கள் சபையில் மந்திரி கே. டி. மாளவியா தெரிவித்திருக்கிறார்.

தொழிற் கண்காட்சிக்கு வந்துள்ள ருமேனியக் குழுவினர் இந்தியப் பேரரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதாகவும், இது குறித்து சர்க்கார் பரிசீலித்து வருவதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ரஷ்யா ஏற்கனவே இந்தியாவிற்கு இத்துறையில் உதவி செய்ய முன்வந்திருப்பது நினைவிலிருக்கலாம்.

இதனையொட்டி, இந்தியா வந்துள்ள ரஷ்ய நிபுணர்கள், இந்திய சர்க்காரின் செலவிலேயே தங்கியிருப்பதாயும் அவர் கூறினர்.

ரஷ்யாவிடமிருந்து இயந்திரங்கள் வாங்குவது என்று முடிவானல், பின்னர், இந்திய நிபுணர்கள் ரஷ்யாவில் பயிற்சிபெற அனுப்பப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ரஷ்ய இராணுவ பலம்

வெகுவாகக் குறைத்துவிட்டதாக அறிவிப்பு

லண்டன், டிச. 12—

கடந்த ஆகஸ்டு திங்களில் அறிவித்தபடி தன் இராணுவ பலத்தை ரஷ்ய சர்க்கார் 6,40,000 பேர்களாகக் குறைத்துக்கொள்ளும் திட்டத்தை நிறைவேற்றியிருப்பதாக மாஸ்கோ வானொலி அறிவித்தது.

இராணுவ பலத்தைக் குறைத்து, அவர்களைத் தொழிலிலும், விவசாயத்திலும் உதவிபுரிய ஈடுபடுத்தப் போவதாகவும், இந்த வேலை டிசம்பர் 15-ந் தேதிக்குள் முடிவடைந்துவிடும் என்றும் கடந்த ஆகஸ்டுத் திங்களில் ரஷ்யா அறிவித்திருந்தது.

ரஷ்யாவின் இராணுவ பலம் 47 இலட்சத்து 50 ஆயிரம் பேர் என்றும், பிரிட்டன் இராணுவப் படை பலம் 10 இலட்சம் பேர் என்றும் பிரிட்டிஷ் வெளி விவகார இலாகா முன்னாள் உதவிச் செயலாளர் அந்தோனி நட்டிங் தெரிவித்திருந்ததை நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

ரஷ்யாவின் இந்த உதாரணத்தைப் பின்பற்றி கிழக்கு ஐரோப்பாவிலும் சில நாடுகள் தமது படை பலத்தைக் குறைத்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

மலேயா தமிழருக்குத் தூக்குத் தண்டனை

நிறுத்திவைக்குமாறுஉத்தரவு

மலேயாவின் அவசர கால விதிகளை மீறி ஆயுதங்கள் எடுத்துச் சென்றதற்காக, மலேயா ரப்பர் தோட்டத் தொழிலாளரான எம். சுப்பிரமணியம் என்ற தமிழருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

'பிரிவி கவுன்சிலு'க்கு 'அப்பீல்' செய்துகொள்ள அவருக்கு இப்போது விசேட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு 13 மணி நேரத்திற்கு முன்னதாக மரண தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்திவைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முதலாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் மொத்தம் 1,200 சமுதாய நலத் திட்ட மண்டலங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்ததில் 1,031 மண்டலங்கள் இது வரை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவைகளில் சேர்க்கப்பட்டுள்ள கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 1,06,057 ஆகும்.

கழகச் செய்திகள்

★

சென்னை 35-வது வட்ட தி. மு. கழகம்

4—12—55 காலை 9 மணியளவில் சென்னை 35-வது வட்டக் கிளைக் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றப் பொதுஉறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் க. மதுரை, சோ. கிருட்டிணமூர்த்தி ஆகியோரை முறையே துணைச் செயலாளர், மாவட்ட உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து முடிவு செய்யப்பட்டதுடன், கழக வரவு - செலவு கணக்குகளும் ஒப்படைக்கப்பட்டன.

கீழ்அருணை நகர் தி. மு. க.

4—12—55 இரவு 8 மணிக்கு, திருவண்ணமலை, கீழ்அருணை நகர் கிளை தி மு கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் மு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றபோது, கழக வரவு - செலவுகள் சரிபார்க்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டும் தி. மு. கழகச் சட்ட திட்டங்கள் பற்றிய சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உதகை நகர் தி. மு. கழகம்

5—12—55 இரவு 8 மணிக்கு அண்ணா முரசொலி மன்றத்தில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் நீலகிரி மாவட்டத்தைத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்றும், தேவிகுளம், பீர்மேடு, ஒகுர் ஆகிய தொகுதிகள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டும், பொங்கல் திருநாளை சிறப்புறக் கொண்டாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

க. புதுப்பட்டி தி.மு.கழகம்

8—12—55ல் தோழர் கே. என். இராமசாமி தலைமையில் நடைபெற்றக் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், தேவிகுளம், பீர்மேடு தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைத்து, சென்னை மாநிலத்திற்குத் 'தமிழகம்', அல்லது 'தமிழ் நாடு' எனப் பெயரிடுமாறு கேட்டுக்கொண்டும், பொங்கல் விழாவை சிறப்புற நடத்துவதென்றும், மதுரை நகரசபைத் தேர்தலில், தோழர் எஸ். முத்து வெற்றி பெற்றமை குறித்துப் பாராட்டுதல் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடலூர் நகர தி.மு. கழகம்

9—12—55 இரவு 9 மணிக்கு கடலூர் நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், திருப்பாப்புலியூர் பாரீஸ் ஆல் நகர தி. மு. கழகப் பணிமனையில், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, அண்மையில் புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது நகர தி. மு. கழகச் செயலாளராகத் தோழர் கி. கோவிந்தராசனை நியமித்தும், இவ்வாண்டு திராவிடர் திருநாள் விழா நடத்த விழாக் குழு ஒன்று அமைத்தும், விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கரூர் தி. மு. கழகம்

11—12—55 மாலை 4 மணிக்கு கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர். இராதா அலுவலகத்தில் தோழர் எம். கே. கரிகாலன் தலைமையில் நடைபெற்றபோது பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை, நிதி ஆகியவைகள் வசூலித்து அனுப்புவதென முடிவு செய்தும், 26—11—55ல் நடைபெற்ற பொதுக்கூட்ட வரவு-செலவுகளை ஒப்புக்கொண்டும், பொங்கல் விழாவை விமரிசையாக நடத்துவதெனவும் முடிவு செய்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செய்திச் சுருள்

★

காதக்கோட்டையில் அண்ணா படிப்பகம் திறப்பு

7—12—55 காலை 6 மணிக்கு, தி.மு.க.பணிமனையில் ஏ.எஸ்.சோமு அவர்களால் அண்ணா படிப்பகம் திறந்து வைக்கப்பட்டது. படிப்பகத்தின் நோக்கம் பற்றி தோழர்கள் க. சின்னமுத்துசாமி, க.சீனிவாசன், மற்றும் பலர் பேசினர்.

கோவை—செழியன் அவர்கள் அறிவிப்பு

"13—12—55ல் எனக்கு வயிற்றில் ஒரு சத்திர சிகிச்சை ஆகி, கோவை அரசியலார் மத்திய மருத்துவமனையில் இருந்து வருகிறேன். இதுவரை நான் ஒத்துக்கொண்ட கூட்டங்களுக்கு வர இயலாது என்பதோடு, மேலும் மூன்று மாதங்களுக்கு எந்தக் கூட்டத்திலும் கலந்துகொள்ள இயலாதவனாக இருக்கிறேன்."

'சிந்தனை'—வார இதழ்

6—12—55ல், திருச்செங்கோடு தி. மு. கழகத் தோழர் பி. பெருமாள், 'சிந்தனை' வார இதழின் ஆசிரியராகத் தம்மை திருச்சி அடிஷனல் மாஜிஸ்திரேட் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். இதழ் திருச்செங்கோட்டிலிருந்து வெளிவரும்.

பெயர் சூட்டல்

ஆமதாபாத் தி. மு. கழகத் தோழர் டி. முத்துக்கிருஷ்ணன் அவர்களின் துணைவியார் ரங்கநாயகி அம்மையார் 29—11—55ல் ஒரு ஆண்மகவுக்குத் தாயானர். குழந்தைக்கு 'அன்பழகன்' எனப் பெயர் சூட்டப்பட்டது இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2- அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

மறைவு—அனுதாபம்

வளவனூர் தி. மு. கழகத் தோழர் க. பழனியப்பன் அவர்களது தந்தையார் கருணாநிதி அவர்கள் இயற்கையெய்தியது குறித்து, 6—12—55ல் தோழர் நடனசபாபதி தலைமையில் நீத்தார் இறுதிக்கடன் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

• • •

கல்லார் எஸ்டேட் தி. மு. கழகத் தோழர் வீ. மாணிக்கம் அவர்கள் தாயார் வீரம்மாள் தமது 75 வது வயதில் இயற்கையெய்தியமை குறித்து, கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

• • •

கும்பகோணம் திராவிடர் இயக்கத் தோழரான சுப்பிரமணியன் அவர்களின் தாயார் மங்களத்தம்மாள் 20-11-55 காலை 6 மணிக்கு இயற்கையெய்தியமைக்குக் கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

• • •

27—11—55-ல், பிரான்மலை, அறிஞர் அண்ணா மன்றச் செயற்குழுக் கூட்டம், தோழர் சே. சி. சாமி தலைமையில் நடைபெற்றபோது, மன்ற துணைச் செயலாளர் தோழர் இராம. சிங்காரத்தின் தமக்கையும் கழக உறுப்பினருமான தோழியர் சாரதாம்பாள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டதுடன் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

புயல், வெள்ள நிவாரணம்

மலேயா தமிழர்கள் நிதி திரட்டுகின்றனர்

தமிழ் நாட்டில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு நிதி திரட்டுவதற்காகச் சிங்கப்பூரில் உள்ள முக்கியத் தமிழர்கள் முயன்றுள்ளனர். இங்குள்ள தமிழர்களின் இரு முக்கிய தலைவர்கள் கூட்டியுள்ளனர்.

சிங்கப்பூரில் உள்ள 'தமிழ் முரசு' இதழ் இதற்காக நிதி வசூலைத் தொடங்கி, இதுவரையில் 2,031 டாலர்களைத் திரட்டியுள்ளது.

மலேயாவில் உள்ள இந்தியர்களில் பெரும்பான்மையோர் தஞ்சாவூர், இராமநாதபுரம் போன்ற சென்னை மாகாணத்தில் இருக்கும் கடற்கரையோர மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

'தமிழ் நேசன்' எனும் கோலாலம்பூர் தமிழ்ப் பத்திரிகையும் நிவாரண நிதி வசூலைத் தொடங்கி, இதுவரையில் 6,128 டாலர்களைத் திரட்டியுள்ளது. 10,000 டாலர்கள் வரை திரட்டுவதாக இவ்விதழ் இலட்சியம் மேற்கொண்டிருக்கிறது.

சிங்கப்பூர் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினர் ரூ. 5,001 முதல் தவணையாக அனுப்பியுள்ளனர்.

வடசென்னை புயல் நிவாரண நிதிக் குழு

வட்டாரப் பெருமக்கள் நிதி திரட்டினர்

தமிழகத்தின் தென் பகுதியில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க வேண்டி வடசென்னை பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிதிக் குழுவினர் 11-12-55 ஞாயிறன்று முக்கிய வீதிவழியே சென்று நிதி திரட்டினர். பொது மக்கள் அனைவரும் பெரும் பங்கேற்று நிதி திரட்டும் பணியில் மிக்க ஆர்வங்காட்டினர். நிமிடத்திற்கு நிமிடம் அரிசி மூட்டைகளும், பருப்பு மூட்டைகளும் நிதி சேர்ப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த வண்டியில் குவிந்தவண்ணமிருந்தன. வீடுகள் தவறாமல் சட்டைகள், வேட்டிகள், புடவைகள் ஆகியன தரப்பட்டு குன்று போல் காட்சியளித்தது.

நிதியாகத் தரப்பட்ட கோழி ஒன்று ஏலம் விடப்பட்டதில் ரூ. 42-க்கு வாங்கப்பட்டது. அன்று மட்டும் ரூ. 1000-த்திற்கு மேல் உண்டியல் வசூல் ஆயிற்று.

நிதி திரட்டும் பணியில் திருவாளர்கள் எம். மாயாண்டி அவர்கள் தலைமையில், எம். பி. எஸ். இரத்தினசாமி, வி. சங்கரன், க. கணேசன், வி. சுந்தரமூர்த்தி, எஸ் ஆர். சுப்பையா, கே எஸ். ஆர். செல்லத்துரை, என். திருவேங்கடம், எம். எஸ். அருணாசலம், சாமுவேல், துரைராஜ், எம். இரத்தினம் ஆகியோர் பெரும்பங்கேற்றனர்.

நிதிக் குழுவினர் இன்று வரை ரூ. 4,000-மும் சுமார் ரூ. 1,000 மதிப்புள்ள அரிசி, பருப்பு வகைகளும், ஏராளமான ஆடைகளும் சேர்த்துள்ளனர்.

நிதி வசூல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நிதியளிக்க விரும்புபவர்கள்—'24, கல்மண்டபம் ரோடு, இராயபுரம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்," என்று, வடசென்னை புயல் நிதிக் குழு செயலாளர் கே எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

நிவாரணத் திட்டம்

துரிதமாக அமுல் நடத்த ஏற்பாடுகள்

புயல் நிவாரணத் திட்டங்களைத் துரிதமாக அமுல் செய்யும் பொருட்டு தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன

கஞ்சித் தொட்டிகள் ஆரம்பிப்பது—துணி வினியோகம் — வீடுகளைத் திரும்பக் கட்டவும், செப்பனிடவும் ஏழைகளுக்குப் பண உதவி அளிப்பது—பணியாற்றி வருவாய்த் தேடிவரும் நபர்களை இழந்த குடும்பத்தினருக்கு இலவச மானியம் தருவது—ஆகிய இனங்களின் கீழ் நிவாரணம் அளிக்கப்படுகிறது.

வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

திருச்சி, தஞ்சை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உணவுத் தானியங்களைச் சேமித்து வைத்திருக்கும் சில வியாபாரிகள், இயற்கை விளைவித்த விபரீதத்தைப் பயன்படுத்திக்கொண்டு விலைகளை உயர்த்துவதாகச் சர்க்காருக்குக் கவலைதரும்தகவல் கிடைத்திருப்பதாகதெரிகிறது. சுமூகமான நிலைமையிலேயே ஏற்கமுடியாத—இம்மாதிரியான சமூகத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள்—ஆயிரக்கணக்கான குடும்பங்கள் உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும் தவிக்கும் இத்தருணத்தில் சகிக்க முடியாத ஒன்றாகும். எனவே, உணவுப் பொருள்களின் விலைகளை உயர்த்துவதற்கு முயற்சிக்கும் வர்த்தகர்களை சர்க்கார் எச்சரித்துள்ளது.

கழகக் கூட்டம்

★

பண்ணைக்காடு (மதுரை மா.)
16—12—55 வெள்ளி மாலை

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். முத்து

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு

"நான் முன்பு அறிவித்துள்ளபடி, 15—12—55-ல் டில்லிக்குச் செல்கிறேன். உறுப்பினர் விண்ணப்பத் தாள் மேலும் தேவைக்கு 'ஜே. ஏ. வகாப், செ. மா. தி. மு. க. துணைச் செயலாளர், மளிகை வியாபாரம், உத்திரமேரூர்' என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன். நான் 1-1-56-ல் வந்துவிடுவேன் என்பதை அறிவித்துக்கொள்கிறேன்,"

என்று, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே டி. எஸ். மணி அறிவிக்கிறார்.

சென்னை 3-வது வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு

15—12—55 இரவு 7 மணிக்கு. சென்னை-வண்ணை, எண் 19-எ வேலாயுத பாண்டியன் தெரு (மேல் மாடியில்) சென்னை 3-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அது போது, பல பிரச்சினைகள் பற்றி பேசப்படும்.

சென்னை 18-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு

16—12—55 மாலை 6 மணிக்கு. சென்னை 18-வது வட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும் அது போது, புயல் நிவாரண நிதி திரட்டுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

மைசூர் முதலமைச்சருக்கு மேலிடம் அழைப்பு

பெங்களூர், டிச. 13—

பெல்லாரி, சிறுகுப்பா, ஹோஸ்பெட், மல்லப்புரம் வட்டங்கள் குறித்த எல்லைத் தகராறுகள் பற்றி விவாதிப்பதற்காக, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, டெல்லி வருமாறு, காங்கிரஸ் மேலிடத்தவரால் அழைக்கப்பட்டிருக்கிறார்.

நடிப்புப் புலவர் இசை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் வல்லுனர்களாயிருப்போர் இன்னும் நம்மிடத்தில் இல்லை; இசைத் துறை இன்னும், 'செம்மங்குடி', 'அரியக்குடி', 'மதுரை', 'சித்தூர்', 'ஆலத்தூர்'—என்ற சில ஊர்களிடத்திலும், தேசிகர் போன்ற சிலரிடத்திலும் மட்டுமே சிக்கிக் கிடக்கிறது. இந்த நிலை மாற இராமசாமி போன்றவர்கள் பெரிதும் முயற்சித்தாக வேண்டும்; அந்த வகையில், இன்று, இராமசாமி அவர்கள் மேற்கொண்ட முயற்சி பலராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். தொடர்ந்து முயற்சித்து, நமது 'நடிப்பு—இசைப் புலவர் இராமசாமி' அவர்கள், இசைத் துறையையும் நம்மவர்கள் கைப்பற்றச் செய்ய வேண்டும்."

மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி நன்றி நவில விழா இனிது முடிவுற்றது

★

தமிழ் மொழி வணக்கப் பாடலுடன் நடிப்புப் புலவர் இராமசாமி அவர்கள் கச்சேரியைத் துவக்கினார்கள்.

தோழர்கள் தஞ்சை கோவிந்தராசன் (வயலின்), தஞ்சை டி. பி. நாகராசன் (மிருதங்கம்), மன்னார்குடி ஆறுமுகம் (கஞ்சிரா) ஆகியோரின் பக்க வாத்தியம் மெச்சத் தகுந்ததாயிருந்தது.

'ஷண்முகப்பிரியா' ராகம் பாடிய இராமசாமி அவர்கள், கர்நாடக சங்கீதத்தில் 'அவாள்' மட்டுமே, சிறப்புப் பெற முடியும் என்ற கூற்றைப் பொய்ப்பித்தார். 'களை'யோடு உச்சத்திலும், அனாயாசமாக, ஆர்ப்பாட்டமின்றி 'சஞ்சாரம்' செய்து மெருகுடன் ராக ஆலாபனை செய்தது தோழர்களின் மகிழ்ச்சியைப் பெருக்கிற்று. அந்த ராகத்தில் அவர் பாடிய 'உள்ளத்தில் ஒருபொழுது' என்ற உருப்படி அமிர்தமாய் இனித்தது.

சாருகேசி இராகத்தில் 'வறியார்க்கு ஈவதே' என்ற பாடல் உள்ளத்தை உருக்கிற்று.

'ஆயில் கொள்ள மறந்தது ஏனோ?' என்ற பாடல் சிம்மேந்திர மத்திம இராகத்தில் பாடப்பட்டது; கம்பீரமான தொனியில், சுருதி சுத்தமாக, 'பாவம்' குன்றாமல் ஆலாபனை செய்தார்—இராமசாமி இந்த இராகத்தை! பிர்க்காக்களை வெகு அனாயாசமாக அவர் கையாண்டது, 'சங்கீதப் பிரியர்களை' உடலை குளிர வைத்தது.

'செயலாறறு அல்லது செத்துமடி' என்ற புரட்சிக் கவிஞரின் பாடல் சங்கராபரணம் இராகத்தில் இசைக்கப்பட்டபோது, உயிர் பெற்று ஒளியுடன் விளங்கிற்று.

சில இசைவாணர்களுக்கே 'முத்திரை' பொறிக்கப்பட்டது என்று வருணிக்கப்படும் 'காம்போதி' இராக ஆலாபனையும், அந்த இராகத்தில் பாடப்பட்ட 'எதற்கும் அஞ்சாதே' என்ற பாடலும் இன்னும் கேட்டோர் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கக்கூடியன; அவ்வளவு 'சாஸ்திரிய'மாக அமைந்திருந்தன

இவையுடனும், இன்னும் பல பாடல்களுடனும், இசை அரங்கு சிறப்பாக அமைந்திருந்தது.

பாடல்கள் இசைத்தார்—ராகம் பாடினார்—என்றாலும், 'தானமும்,' 'பல்லவி'யும் இசைக்கவில்லையே என்ற குறைக்காக சிலரேனும் வருந்தத்தான் செய்தனர்.

'சொக்கவாசல்' திரைப்படத்தில் அவர் பாடியுள்ள சீரிய பாடல்கள் சிலவற்றை அரங்கில் இசைத்து, பல்லவி பாடாத குறையை நீக்கிவைத்தார்—தோழர் இராமசாமி

பொதுச் செயலாளர் அவர்கள் "தோழர் இராமசாமி அவர்களை இனி, 'நடிப்பு, இசைப் புலவர்' என்று அழைக்கவேண்டும்", என்று கூறியது, வெறும் புகழ்ச்சிக்கல்ல என்பதை கேட்டோர் தெளிவாக உணரமுடியும்.

கோவாவில் அமெரிக்க விமானத் தளம்

ரஷ்யப் பத்திரிகையின் கண்டனம்

லண்டன், டிச. 12—

"கோவா, டையூ, டாமன் இம்மூன்று திட்டுக்களும் இந்தியாவின் பிரிக்க முடியாத திட்டுக்களே; கோவாவில் ஆதிக்கம் புரியும் போர்ச்சுகீசியர் நீண்டகாலமாக அமெரிக்காவின் பாதுகாப்பைப் பெற்றுவந்திருக்கிறார்கள்.

"கோவாவில் விமான தளம் கட்டிக் கொள்வதற்கு அமெரிக்கருக்கு மகிழ்ச்சியுடன் போர்ச்சுகீசியர் அனுமதியளித்திருப்பது, போர்ச்சுகீசியருக்கு அமெரிக்கா வெளிப்படையாகவே பாதுகாப்புத் தருகிறது என்பதற்குப் போதுமான சான்றாகும்,"

என்று, சோவியத் சர்க்கார் பத்திரிகையான, 'இஸ்வெஸ்தியா' கூறியிருக்கிறதாம்.

'தூரக் கிழக்கில் போர்ச்சுகலின் மாகாணங்கள்' என்பது பற்றி அண்மையில் அமெரிக்க வெளி விவகார மந்திரி டல்லசும், போர்ச்சுகல் வெளிவிவகார மந்திரி டாக்டர் குன்ஹாவும் வெளியிட்ட கூட்டறிக்கை பற்றி எழுதியுள்ள கட்டுரையில்தான் 'இஸ்வெஸ்தியா' இவ்வாறு எழுதியுள்ளதாம்.

"இந்தியாவிற்குச் சொந்தமான கோவா பகுதியில் அமெரிக்கா இராணுவத் தளம் ஏற்படுத்துவது என்பது இந்திய மக்கள், இந்திய சர்க்கார் ஆகியோரின் விருப்பத்திற்கு விரோதமானது; அமெரிக்கர்கள் தங்கள் உறுதிமொழிக்கு இணங்கி நடந்து கொள்ளும் யோக்கியப் பொறுப்பு இல்லாதவர்கள் என்பதை டல்லசின் அறிக்கை காண்பித்துவிட்டது. மற்றும், இந்தியாவிற்கும்—ரஷ்யாவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள நட்பைக் கண்டு மேற்கத்தியருக்குக் கிலி ஏற்பட்டிருக்கிறது; எனவே, இந்த நட்பிற்கு இழிவு தேட அவர்கள் முயற்சிக்கின்றனர்," என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளதாம்.

சென்னை மாணவர் மன்றம்

வாலாஜாபாத் இன்பத் தரைச் செலவு

மன்றத்தின் சார்பாக 18-12-55 ஞாயிறு காலை 6-45 மணிக்கு, சென்னை கடற்கரை புகை வண்டி நிலையத்திலிருந்து வாலாஜாபாத் இந்துமதப் பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்று மாலை 5 மணிக்கு திரும்பிவந்துவிடக்கூடிய வகையில் வசதியாக ஓர் இன்பப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உடன்வரவிழைவோர், '17, இரத்தின முதலி தெரு, சென்னை-1'-ல் உள்ள மன்ற நிலையத்திற்கு வந்து நேரில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

ஆப்கன் நாட்டிற்கோ அல்லது காஷ்மீருக்கோ போகக் கூடாதென்று ரஷ்யத் தலைவர்களிடம் பாகிஸ்தான் சர்க்கார் சொல்லவே இல்லையாம்.

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு

"அண்மையில் இராமநாதபுரம்—மதுரை—தஞ்சை—திருச்சி ஆகிய மாவட்டங்களில் கடும் புயலாலும், பெரும் மழையாலும், வெள்ளப் பெருக்காலும் தாக்கப்பட்டு உயிரிழந்த மக்களுக்காக அன்னாரின் குடும்பத்தாருக்கும், உற்றார்—உறவினர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்ட தி.மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், கோடிக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ள உணவுப் பொருள்கள், பயிர் பச்சைகள், மரஞ்செடிகள், தோட்டங்கள், வீடுகள், கால்நடைகள் ஆகியவற்றை இழந்து தவிக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், தொழிலாளத் தோழர்களுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

"தக்க தருணத்தில், சென்னை முதலமைச்சர் ஆங்காங்கு சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் கண்டு மக்களுக்கு சிறிது சிறிது உதவிகள் செய்து வருவது கண்டு மகிழ்வதோடு, உடனடியாக பாதிக்கப்பட்ட சாலைகள், கண்மாய்கள், ஆறுகள் ஆகியவற்றைச் சீர்திருத்தம் செய்யவேணுமாய் கேட்டுக்கொள்கிறது.

"நமது மாவட்டத்திலுள்ள தி. மு. கழகத் தோழர்கள் பொதுச்செயலாளர் அறிக்கைக்கு ஒப்ப, பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆங்காங்கு சகல கட்சித் தோழர்களோடு சேர்ந்தோ, அல்லது தனித்தோ இயன்ற நிவாரண வேலைகளில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்,"

என்று, இராமநாதபுரம் மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் அறிவிக்கிறார்.

மதுரை மாவட்ட மக்களுக்கு பி. டி. இராசன் வேண்டுகோள்

"போர்க்காலத்தில் அன்னியர்கள் படையெடுப்பைத் தடுக்கும் முயற்சியில் மதுரை முன்னின்றது; ஆகவே, இப்பொழுது இயற்கையின் கோடுர விளைவுகளுக்கு புயலாலும் ஆளாகி அவதியுறும் நமது மக்களுக்கு உதவுவதில் மதுரை மற்ற மாவட்டங்களைவிட எந்தவிதத்திலும் பின்தங்காது என்று நம்புகிறேன்."

என்று நீதிக்கட்சித் தலைவரும், சென்னை சட்டசபை உறுப்பினருமான திரு. பி. டி. இராசன் விடுத்துள்ள வேண்டுகோளில் தமிழக மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் கூறுவதாவது :—

இயற்கையின் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ பொதுமக்கள் முன்வரவேண்டும்; தங்கள் சகோதரர்களுக்கு அனுதாபத்தைக்காட்டும் வகையில் தமிழக மக்கள் நிவாரணத்திற்காக தாராளமாக உதவவேண்டும்.

பல உயிர்களுக்குச் சேதமேற்பட்டது நீங்கலாக பல கோடி ரூபாய்கள் மதிப்புள்ள உணவுப் பயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களில் அழிவு ஏற்பட்டிருக்குமென்று தெரிகிறது.

வீடுகளை இழந்து தவிக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கத் தமிழக மக்கள் தாராளமாக உதவுவார்களென்பது நிச்சயம் என்றும் திரு. இராசன் கூறுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.